# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

(2015 லிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)



சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத்தளம்: www.nie.lk

மின்னஞ்சல்: info@nie.lk

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

**(2015 லிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**

**சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை**

**தேசிய கல்வி நிறுவகம்**

**ஸ்ரீலங்கா**

இணையத்தளம்: www.nie.lk

மின்னஞ்சல்: info@nie.lk

**கிறிஸ்தவம்**

**தரம் 6**

**ஆசிரியர் வழிகாட்டி**

முதற்பதிப்பு 2015

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே


- தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு : பதிப்பகம்

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும் :** கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்.

பாட இணைப்பாளர் : அருட்தந்தை கார்ல்டன் டி ஜோசப் சில்வா
விரிவுரையாளர் -தேசிய கல்வி நிறுவகம்.

: அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்டன்டைன்
உதவி செயற்றிட்ட அதிகாரி- தேசிய கல்வி நிறுவகம்.

## ஆலோசகர் குழு

- பேராயர் அதி.வண. டிலோராஜ் கனகசபை
  இலங்கை திருச்சபை - கொழும்பு மறைமாவட்டம்

- பேராயர் அதி.வண. சாந்தா பிரான்சிஸ்
  இலங்கை திருச்சபை - குருணாகலை மறைமாவட்டம்

- பேராயர் அதி.வண. அருள் அறிவர். டேனியல் எஸ். தியாகராஜா
  தென்னிந்திய திருச்சபை

- அருள் அறிவர். ஏ.டப்ளியு. ஜெபனேசன்
  தலைவர் - இலங்கை மெதடிஸ்த திருஅவை

- அருட்பணி. பிரியந்த விஜேகுணவர்தன
  தலைவர் - இலங்கை பெப்டிஸ்த சங்கம்

- அருட்பணி. சார்லி ஜேன்ஸ்
  தலைவர் - கிறிஸ்தவ சீர்திருத்த சபை

- அருட்பணி. சமன் பெரேரா
  தலைவர் - பிரஸ்பட்டேரியன் திருச்சபை

- கொமிசனர் மெல்கம் இந்துருவகே
  பிரதேச முதல்வர் - இரட்சணிய சேனை

- அருட்பணி. டப்ளியு.பி. எபனேசர் ஜோசப்
  பொதுச் செயலாளர் - இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்

- அருட்பணி. ஹேஷான் டி சில்வா
  இலங்கை பெப்டிஸ்த சங்கம்

- திருமதி. எம். சபாரஞ்சன்
  உதவி கல்வி பணிப்பாளர்- சமய பகுதி, கல்வி அமைச்சு

- அருட்பணி. ஜே.ஏ. மிஹிரி டி சில்வா சல்காது
  நிறைவேற்று செயலாளர் - கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு, இ.தே.கி.ம

- அருட்பணி. வில்லியம் விஜேகோன்
  இலங்கை பெப்டிஸ்த சங்கம்

## எழுத்தாளர் குழு

- அருட்பணி. ஜே.ஏ. மிஹிரி டி சில்வா சல்காது
  முதுமானி(கிறிஸ்தவக் கல்வி)
  நிறைவேற்று செயலாளர் - கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு, இ.தே.கி.ம

- திருமதி. நிலந்தி தீபா டி சில்வா
  முதுமானி(கிறிஸ்தவக் கல்வி) பயிற்றப்பட்ட ஆசிரியர் (கிறிஸ்தவம்)
  மேமா/பிலி/மெதடிஸ்த உயர்தர பாடசாலை - மொரட்டுவ

- திருமதி. ரதிக்கா சமந்தி மென்டிஸ்
  முதுமானி(கிறிஸ்தவக் கல்வி, கிறிஸ்தவ நெறி) சிங்களம் கலைமாணி, பட்டபின் கல்வி டிப்ளோமா
  பரி. தோமா கல்லூரி - கல்கிசை

- திருமதி.அருணி இந்திகா பெரேரா ஜயதுங்க
  இறையியல் இளமாணி, பட்டபின் கல்வி டிப்ளோமா
  பிஷப் கல்லூரி - கொழும்பு 03

- திருமதி.எம். ரேணுகா தமயந்தி
  கலைமாணி - பட்டபின் கல்வி டிப்ளோமா

- திருமதி. எம்.பி. செல்வநிதி பெரேரா
  ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், பயிற்றப்பட்ட ஆசிரியர் (விஞ்ஞானம்)
  வெஸ்லி கல்லூரி - கொழும்பு 08

- செல்வி. த. ஸ்டெலா தர்ஷினி
  இறையியல் இளம்மாணி
  கிறிஸ்தவ கல்விக்கான ஆணைக்குழு - இ.தே.கி.ம

## ஆசிரியர் கைந்நூலை பாவிப்பதற்கான அறிவுரைகள்

கிறிஸ்தவ நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாட பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளை பயன்படுத்துங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாகப் பிரித்து குழு செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினை தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும் பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும் பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தை செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலை பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தை தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றி பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாக பெற்றோர்களுக்கும் முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**அருட்தந்தை கார்ல்டன் டி ஜோசப் சில்வா**
**விரிவுரையாளர்**
**தேசிய கல்வி நிறுவகம்.**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | III |
| பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | IV |
| பாட ஆலோசனைக் குழு | V |
| ஆசிரியர் வழிகாட்டியை பாவிப்பதற்கான அறிவுறுத்தல்கள் | VII |
| பாடத்திட்டம் | X |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் | 1-47 |

# பாட அறிமுகம்

ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்குவது இக்காலகட்டத்தின் அவசியமாகும். இதற்காக சமயமானது மகத்தான பணியாற்றி வருகின்றது குறிப்பிடத்தக்கது. இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே சமய பாட கலைத்திட்டமானது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. முழுமை நிறைந்த பிள்ளையில் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத்திறன் என்பனவற்றுடன் தனிநபர் ஆற்றலுடன் நற்பண்புகளும் வளர வேண்டுமென்பதே கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிள்ளைகள் இறையரசின் கோட்பாடுகளுக்கேற்ப கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து வாழும் கிறிஸ்துவை வாழ்வில் பிரதிபலித்தலே இக்கலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ நோக்கு, நிலைப்பாடு, உண்மை சத்தியங்கள் போன்ற தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு 6-11 வரையிலான வகுப்பு மாணவர் உச்ச பயனை அடையவேண்டுமென்பதே கிறிஸ்தவ பாட கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும்.

தரம் 11 இன் இறுதியில் சமூகத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்து கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வில் பிரதிபலித்து சமூகத்தில் இறைவிசுவாசத்துடன் முழுமை நிறைந்த புதிய இளம் கிறிஸ்தவனாக உலகுக்கு கொடையாக வழங்குவது இக் கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாணவ மையக் கல்வியினூடாக முன்மாதிரியாக செயற்பட்டு கிறிஸ்தவ அடையாளத்துடன் உலகில் ஒளிவீசும் இறையரசின் பிரஜைகளை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதே ஆசிரியரின் பிரதான கடமையாகும். இதற்கான தேர்ச்சிகளை மாணவரில் வளர்த்திட வழிகாட்டி நூலானது ஆசிரியருக்கு உறுதுணையாக அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆசிரிய வழிகாட்டியின் செயற்பாடுகளினூடாக கிறிஸ்துவுக்கு சான்று பகரும் கிறிஸ்தவ பற்றுள்ள மாணவ பரம்பரையை நாட்டுக்கும் உலகுக்கும் வழங்கிடும் மகத்தான பணியை நிறைவேற்றிட புத்தாக்கத் திறனுடைய ஆசிரியராக இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்.

## தேசிய குறிக்கோள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும். |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்தவாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

## 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

## 5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

## 6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

## 7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

மேற்குறிப்பிட்ட தேசிய கல்விக் குறிக்கோள்களும், அடிப்படைத் தேர்ச்சிகளும் இலங்கையின் கல்வி தொடர்பாக தேசிய கொள்கைகள், மற்றும் பிரேரணைகளை உள்ளடங்கிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாத அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்.

## பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என்பதை விசுவாசித்து அவர் எமக்கு அளித்துள்ள அருள்கொடைகளை பயன்படுத்தியும் பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்வதற்கும் செயற்படுவர்.

2. கிறிஸ்துவின் அளவற்ற அன்பை அனுபவித்து சமூகம் ஒளிபெறவதற்காக செயற்படுவர்.

3. தூய ஆவியானவரின் வழிநடத்தலால் தமது திறன்கள், ஆற்றல்கள் என்பனவற்றை நல்லதொரு சமூக பணிக்காக மற்றும் தேசிய அபிவிருத்திக்காக ஈடுபடுத்துவதற்கு செயற்படுவர்.

4. தேசிய மற்றும் பல்சமய நல்லுறவை வளர்த்து ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்கு இறையரசின் விழுமியங்களை உறுதுணையாகக் கொள்வர்.

5. நபர்களின் உடல், உள, நல வளங்களுக்கு மனித நேயத்தை மதிப்பதன் அடிப்படையிலான சிறந்த வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதற்கு இறைவார்த்தையை இணைத்துக் கொள்வர்.

6. சிறப்பான கிறிஸ்தவ வாழ்வின் செயற்பாடுகளுக்கூடாக கிறிஸ்துவுக்கு சான்று பகர்வர்.

## வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

2. ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

3. தூய ஆவியானவரால் துணிவும் சக்தியும் பெற்று புதுவாழ்வின் அனுபவத்தைப் பெறுவர்.

4. இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

5. திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிபாட்டியாகக் கொள்வர்.

## 6.1.4. கிறிஸ்தவம் தரம் 6
## பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1. இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காணம் என விசுவாசிப்பர். | 6.1.1. இறைவனே அழகிய உலகின் படைப்பாளர் என்பதை ஏற்றுக்கொள்வர். | 1. கடவுள் உலகைப் படைத்தல் (தொ.நூ.1:1-31-2:1-3)<br>● இறைபடைப்பின் அலங்காரமும் விசேடத்துவமும் | ● இறைவன் ஆறு நாட்களில் படைத்தவைகளை ஒழுங்குபடுத்துவர்.<br>● இறைவன் உலகை படைத்தார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● இறைவனின் படைப்பை சித்திரமாக வரைவர்.<br>● இறைவனின் அழகிய படைப்புக்களுக்காக துதி செலுத்துவர்.<br>● இறைவனை ஒன்றிணைந்து நன்றி செலுத்தி வழிபடுவர். | 2 |
| | 6.1.2. இறைவன் பலவித பெறுமதிமிக்க படைப்புக்களை எமக்கு தந்துள்ளார் என அறிவர். | 2. கடல், நதி, நீர்வீழ்ச்சி, ஆகாயசுடர்கள், உயிரினங்கள் உட்பட ஏனைய இறைபடைப்புக்கள் (தொ.நூ.1:6-25) | ● இறைவன் படைத்துள்ள ஆகாயசுடர்களையும் விலங்கினங்களையும் அட்டவணைப்படுத்துவர்.<br>● தாவரங்களின் விருத்தியானது இறைவனின் செயற்பாடு என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● அவதானத்துடன் வினாக்களுக்கு விடை எழுதுவர்.<br>● படைப்பினூடாக இறை மகிமை வெளிப்படுகின்றது என்பதை விசுவாசிப்பர்.<br>● படைப்புக்களுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவர். | 2 |
| | 6.1.3. இறைவனால் மனிதன் படைக்கப்பட்டவன் என்பதற்கு நன்றி செலுத்தி படைப்புக்களின் பாதுகாவலனாக செயற்படுவர். | 3. உலக படைப்புக்களின் சிகரம் மனிதன் (படைப்பில் பிள்ளைகளின் விசேடத்துவம்)<br>● மாட்சியான படைப்பின் பலன்களை பெற்று நன்றி செலுத்துதல். (தி.பா.19:1-2)<br>● மனிதனே இறைபடைப்பின் பாதுகாவலன். (தொ.நூ1:27-28, 2:15) | ● உலக படைப்புக்களின் சிகரம் மனிதன் என்பதற்கான தகவல்களை சேகரிப்பர்.<br>● இறைபடைப்புக்களை பாதுகாக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான சுவரொட்டிகள் மூலமாக படைப்புக்கள் பற்றிய தமது பொறுப்புக்களை எடுத்துக்காட்டுவர்.<br>● எமது வாழ்வானது உலகத்தினுள் பாதுகாக்கப்பட வேண்டும் என விசுவாசிப்பர்.<br>● சூழல் பாதுகாப்பில் ஒன்றித்து செயற்படுவர். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2. ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர். | 6.2.1. இயேசுவின் பிறப்பானது மிகச் சிறப்பானது என விளங்கிக் கொள்வர். | 1. இயேசுவின் பிறப்பு மரியாளுக்கு முன்னறிவித்தல் (லூக்கா 1:26-31)<br>● இயேசுவின் பிறப்பு (லூக்கா2:17)<br>● இயேசுவின் பிறப்பை இடையர்களும் ஞானிகளும் அறிதல் (லூக்கா 2:8-20, மத்தேயு 2:1-12) | ● இயேசுவின் பிறப்பை பற்றிய தகவல்களை சேகரிப்பர்.<br>● இயேசு மீட்பர் என ஏற்றுக்கொள்வர்.<br>● இயேசுவின் பிறப்பை நாடகமாக நடித்துக் காட்டுவர்.<br>● இறை தொனிக்கு பணிவுடன் கீழ்படிவர்.<br>● ஒன்றிணைந்து இறைவனுக்கு துதி செலுத்தி வழிபடுவர். | 4 |
| | 6.2.2. இயேசுவின் இளமைக் காலத்தை வாழ்வுக்கு முன்மாதிரியாகக் கொள்வர். | 2. இயேசுவின் இளமைப்பருவம் (லூக்கா 2:41-52) | ● இயேசு 12 வயதில் பாஸ்கா விழாவை கொண்டாட சென்ற நிகழ்வை விபரிப்பர்.<br>● இயேசு இறை மனித விருப்பங்களை மேற்கொண்டு செயற்பட்டார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● இயேசுவைப் போன்று எமது செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி சஞ்சிகையொன்றுக்கு கடிதம் எழுதி முன்வைப்பர்.<br>● இயேசுவைப் போல சிறுபருவத்திலிருந்தே இறை உறவுடன் வாழ்வர்.<br>● குழுக்களாக ஒன்றிணைந்து செயற்படுவர். | 2 |
| | 6.2.3. இயேசு துன்பமும் சிலுவையில் அறையப்படும் நிகழ்வுகளையும் கற்பர் | 3. இயேசுவின் துன்பமும் சிலுவையில் அறையப்படுதலும் (மத்தேயு 27:32-50) | ● இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்னான நிகழ்வுகளை வரிசைப் படுத்துவர்.<br>● எமது பாவங்களுக்காக இயேசு உயிர் நீத்தார் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● சுவரேடு ஒன்றுக்கு ஆக்கபூர்வமான கடிதம் எழுதுவர்.<br>● இயேசுவின் சிலுவை பலியால் நாம் மீட்பு பெற்றோம் என்பதை விசுவாசிப்பர்.<br>● இறைவனை ஒன்றிணைந்து துதித்து வாழ்வர். | 4 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 6.2.4. இயேசுவின் உயிர்ப்பால் ஒளி பெறுவர். | .4. இயேசு உயிர்பெற்றெழுதல் (மத்தேயு 28:1-10) | ● இயேசுவின் உயிர்ப்புக்கு பின் நிகழ்ந்த நிகழ்வுகளை சேகரிப்பர்.<br>● இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● இயேசுவின் உயிர்ப்பின் நிகழ்வை உரையாடுவர்.<br>● இயேசுவின் உயிர்ப்பால் பெற்றுக்கொண்ட புதுவாழ்வை விசுவாசத்துடன் பகிர்ந்து கொள்வர்.<br>● உயிர்ப்பின் செய்தியை மற்றவருக்கு எடுத்துரைப்பர். | 2 |
| | 6.2.5. இயேசு உயிர் பெற்றெழுந்த நிகழ்வுகளை வரிசைப்படுத்துவர். | 5. மகதலேனா மரியாள் / எம்மாவு பயணம் (லூக்கா 24:1-40) | ● இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கான சான்றுகளை சேகரிப்பர்.<br>● இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்ந்தோரின் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுவரொட்டி தயாரிப்பர்.<br>● இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிப்பர்.<br>● இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்வர். | 4 |
| | 6.2.6. இயேசுவின் உயிர்ப்பின் வெற்றியை தமது வாழ்வுக்கு சுவீகரித்து கொள்வர். | 6 உயிர்ப்பு நிலையான வாழ்வுக்கு வழி | ● ‘இயேசுவின் உயிர்ப்பு நிலைவாழ்வுக்கான வழி’ என்பதற்கான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● இறை உறவில் பங்கேற்று நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள முடியும் என ஏற்றுக் கொள்வர்.<br>● ஆக்கபூர்வமான கடிதம், உள்ளத்தின் வெளிப்பாடு, கவிதை போன்றனவற்றை தயாரிப்பர்.<br>● இயேசுவின் மூலமாக புதுவாழ்வு உண்டு என்பதைவிசுவாசிப்பர்.<br>● நாம் பெறும் நிலைவாழ்வுக்காக இணைந்து இறைவனைத் துதிப்பர். | 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3. தூய ஆவியான வரால் துணிவும் சக்தியும் பெற்று புதுவாழ்வின் அனுபவத் தைப் பெறுவர். | 6.3.1. இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வால் தூய ஆவியானவரை அறிவர். | 1. இயேசு திருமுழுக்கு பெறதல். (மாற்கு 1:911) | ● இயேசுவின் திருமுழுக்கு பற்றிய கருத்துக்களை சேகரிப்பர்.<br>● இயேசு இறைமகன் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>● அவதானமாக வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>● இறை தொனிக்கு செவிமடுப்பர்.<br>● தூய ஆவியின் வழிகாட்டலுக்கு ஏற்ப இணைந்து வாழ்வர்.<br>● நாம் பெறும் நிலைவாழ்வுக்காக இணைந்து இறைவனை துதித்து வழிபடுவர். | 2 |
| | 6.3.2. தூய ஆவியின் வழிகாட்டலுடன் செயற்படுவர். | 2. இயேசு பாலைநிலத்துக்கு அழைத்து செல்லப்படல். (லூக்கா 4:1-13) | ● இயேசு முகங்கொடுத்த சோதனைகளை விபரிப்பர்.<br>● இறைவார்த்தைக்கூடாக தீர்வு உள்ளதென ஏற்றுக்கொள்வர்.<br>● இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளைக் காட்டும் சுவரொட்டி தயாரிப்பர்.<br>● இறைவார்த்தையால் சோதனைகளிலிருந்து விடுதலை பெறமுடியும் என விசுவாசிப்பர்.<br>● தூய ஆவியின் வழிநடத்துதலைப் பெற்றுச் சமூகத்தில் புதுவாழ்வு வாழ்வர் | 3 |
| | 6.3.3. தூய ஆவியின் செயற்பாட்டால் துணிவு பெறுவர். | .3. பிலிப்பு காசாவுக்கு புறப்பட்டு போதல் (தி.பா. 8:26-40) | ● தூய ஆவியானவர் எமக்கு தரும் அழைப்பை விபரிப்பர்.<br>● தூய ஆவியானவரின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்வர்.<br>● கேலிச் சித்திரம் (Cartoon) ஒன்றை தயாரிப்பர்.<br>● தூய ஆவியானவர் எம்மை இறைபணிக்காக அழைக்கிறார் என்பதை விசுவாசிப்பர்.<br>● நற்செய்தியை மற்றவருக்கு அறிவிப்பர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4. இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்கப் பங்களிப்பு வழங்குவர். | 6.4.1. இறையரசில் அன்பின் முக்கியத் துவத்தைப் புரிந்து கொள்வர். | 1. அன்பு- நல்ல சமாரியர் உவமை (லூக்கா10:25-37) | ● நல்ல சமாரியன் உவமை வாயிலாக அன்பைப் பற்றிய கருத்துக்களை விளங்கிக் கொள்வர்.<br>● உண்மையான அன்பானது பெறுமதிமிக்க கிறிஸ்தவ விழுமியங்களில் ஒன்று என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>● உண்மையான கிறிஸ்தவ அன்பு தொடர்பான பாடலை ஆக்கம்செய்வர்.<br>● அன்பின் மூலமாக சவால்களை வெற்றிகொள்ளலாம் என்பதை விசுவாசிப்பர்.<br>● பொதுநலத்துடன் செயற்படுவதன் மூலம் பிறரில் அன்பு காட்டுவர். | 3 |
| | 6.4.2. இறையரசின் உறுப்பினராக விசுவாசப் பலத்தை அனுபவிப்பர். | 2. விசுவாசம் - எரிகோவில் பார்வையற்றவர் பார்வை பெறுதல் (மாற்கு 10:46-52) | ● பார்வையற்றவர் சுகம்பெற்ற சம்பவத்தை விபரிப்பர்.<br>● விசுவாச வாழ்வை வாழவேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● விசுவாசத்தை வளர்க்கும் வகையிலான மன்றாடலை எழுதுக.<br>● விசுவாசத்தின் மூலம் புதுமையான அனுபவத்தைப் பெறலாம் என விசுவாசிப்பர்.<br>● இறை விசுவாசம் மற்றவர்களில் வளர்வதற்காக செயற்படுவர். | 2 |
| | 6.4.3. இறையரசின் உறுப்பினராக மன்னிப்பு வழங்குவர் | 3 மன்னித்தல் - காணாமற்போன மகன் உவமை (லூக்கா15:11-32) | ● காணாமல் போன மகன் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.<br>● இறைவன் மனம்திரும்பும் எமக்கு மன்னிப்பை வழங்குவார் என ஏற்றுக்கொள்வர்.<br>● காணாமல்போன மகன் பற்றிய உவமையை ஆக்கபூர்வமாக நடித்துக்காட்டுவர்.<br>● மன்னிப்பு கொடுப்பதன் மூலம் வாழ்வு கட்டியெழுப்பப்படும் என விசுவாசிப்பர்.<br>● நாளாந்த வாழ்வில் பிறரை மன்னிப்பர். | 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 6.4.4. எப்போதும் இறைவனுக்கு நன்றி செலுத்தி வாழ்வர். | 4. நன்றி செலுத்துதல் - பத்து தொழுநோயாளர் (லூக்கா17:11-19) | ● பத்து தொழுநோயாளர்களின் உவமையை விபரிப்பர்.<br>● எப்போதும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.<br>● இறைவனுக்கு நன்றி செலுத்தும் வாழ்த்து அட்டையை தயாரிப்பர்.<br>● அன்றாட வாழ்வில் ‘நன்றி’ என்ற சொல்லை பயன்படுத்துவர்.<br>● பிறரிடமிருந்து பெறும் உதவிகளுக்காக உளமார்ந்த நன்றிகளை செலுத்துவர். | 2 |
| | 6.4.5. தாழ்வாக வாழப் பழகுவர். | 5. தாழ்வு – பரிசேயரும் வரிதண்டுபவரும் உவமை (லூக்கா 18:9-14) | ● மன்றாடுவதற்காக சென்ற பரிசேயரும் வரி அறவிடுவோரும் பற்றிய உவமை தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● தாழ்வானது இறையரசின் பிரஜைகளுடைய பண்பு என ஏற்றுக்கொள்வர்.<br>● வரி அறவிடுபவர் எமக்கு கற்றுத் தந்த ‘தாழ்வு’ எனும் தலைப்பில் சுவரொட்டி தயாரிப்பர்.<br>● தாழ்வின் மூலம் சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதை விசுவாசிப்பர்.<br>● தாழ்வுடன் வாழ்வதன் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாவர். | 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 5.திரு விவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர். | 6.5.1. திருவிவிலியத்தின் அமைப்பை விளங்கிக் கொள்வர். | 6.5.1. திருவிவிலியத்தின் அமைப்பும் வரிசைப்படுத்துதலும் | ● திருவிவிலியத்தை வகைப்படுத்துவர்.<br>● திருவிவிலியத்தில் உள்ள இறைவார்த்தையை ஏற்றுக்கொள்வர்.<br>● திருவிவிலியத்திலுள்ள வகைகளை சுவரொட்டியாக தயாரிப்பர்.<br>● திருவிவிலியத்திலுள்ள முன்மாதிரிகளையும், போதனைகளையும் பின்பற்றுவர்.<br>● பிறரும் திருவிவிலியத்தை வாழ்வுக்கு முன்னுதாரணமாக கொள்வதற்கு வழிகாட்டுவர். | 3 |
| | 6.5.2. திருவிவிலியத்தின் சிறப்புத் தன்மையை அறிவர். | 6.5.2. கிறிஸ்தவ வாழ்வுக்கு உயிருள்ள வழிகாட்டி | ● திருவிவிலியத்தை சரியாக வாசிப்பதன் முக்கியத்துவத்தை விபரிப்பர்.<br>● இறைவார்த்தை மூலம் இறை வழிநடத்தல கிடைக்கும் என ஏற்றுக் கொள்வர்.<br>● திருவிவிலியத்தின் அறிவுரைகள் தொடர்பாக சிறு புத்தகமொன்றை தயாரிப்பர்.<br>● இறைவார்த்தை உயிருள்ளது என விசுவாசிப்பர்.<br>● திருவிவிலிய வழிகாட்டுதலுக்கேற்ப நட்புறவுடன் இணைந்து வாழ்வர். | 2 |
| | 6.5.3. தாவீதின் மூலமாக வாழ்வில் பலம் பெறுவர். | 6.5.3. தாவீது (1 சாமு. 17:37-40,45,47) | ● தாவீதிடமிருந்த இறை விசுவாசம் தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● சவால்களை வெற்றிகொள்ள இறை ஆற்றல் எமக்குக் கிடைக்குமென ஏற்றுக்கொள்வர்.<br>● தாவீதின் இறை விசுவாசம் வெளிப்படும் வாக்கியத்தை முன்வைப்பர்.<br>● இறைவனின் பெயரால் வெற்றிபெற முடியும் என விசுவாசிப்பர்.<br>● சமுதாயத்தில் தராதரம் பாராது செயற்படுவர். | 3 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 6.5.4. சகோதர அன்புடன் செயற்படுவர். | 6.5.4. மிரியாம் (வி.ப. 2:5-9) | ● மிரியாமிடம் காணப்பட்ட நற்பண்புகளை விபரிப்பர்.<br>● இறை பாதுகாப்பு எப்போதும் கிடைக்கும் என ஏற்றுக்கொள்வர்.<br>● மிரியாமின் வாழ்க்கைக் கதையை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.<br>● சவால்களுக்கு மத்தியில் முன்மதியோடு செயற்படுவர்.<br>● சமுதாயத்தில் சகவாழ்வு வாழ்வர். | 3 |
| | 6.5.5. இறைதொனிக்கு செவிமடுத்து வாழப் பழகுவர். | 6.5.5. சாமுவேல (1சாமு. 3:1-10) | ● சாமுவேலின் அழைப்புக்கு பொருத்தமான கருத்துக்களை சேகரிப்பர்.<br>● இறைகுரலுக்கு செவிகொடுக்க வேண்டுமென ஏற்றுக்கொள்வர்.<br>● சாமுவேல் கதைக்கு பொருத்தமான சித்திரத்தை வரைவர்.<br>● இறைகுரலுக்குச் செவிமடுப்பர்.<br>● பொது இறைவழிபாட்டில் ஈடுபடுவர். | 3 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 6.1.1** : இறைவனே அழகிய உலகின் படைப்பாளர் என்பதை ஏற்றுக்கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- இறைவன் ஆறு நாட்களில் படைத்தவைகளை ஒழுங்குபடுத்துவர்.
- இறைவன் உலகை படைத்தார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- இறைவனின் படைப்பை சித்திரமாக வரைவர்.
- இறைவனின் அழகிய படைப்புக்களுக்காக துதி செலுத்துவர்.
- இறைவனை ஒன்றிணைந்து நன்றி செலுத்தி வழிபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவரை சுற்றாடலை பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- சுற்றாடலை அவதானிப்பதற்கு இடமளியுங்கள்.
- மாணவரை கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

  - பலவிதமான மரங்கள், பூக்கள், விலங்குகள் உள்ளன.
  - ஆகாய சுடர்கள் மற்றும் புவி என்பன புதுமைகளை வெளிப்படுத்தும் கடவுளின் படைப்புக்கள்.
  - இறைவன் படைத்த உலகானது பல்வேறு சிறப்புத் தன்மைகளை கொண்டது.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.

  - நாம் வாழும் உலகம் இறைவனால் படைக்கப்பட்டது.
  - படைப்பு மிகவும் அழகானதும் சிறப்பானதும் ஆகும்.
  - இறைவன் உலகை ஆறு நாட்களில் படைத்தார்.
  - இறைவனின் அழகிய படைப்புக்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (தொ.நூ.1:1-31, 2:1-3)
- வர்ணப் பென்சில், கரையும் வர்ணங்கள்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப் பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு கொடுக்கப்பட்ட திருவிவிலியப் பகுதியை நன்கு வாசியுங்கள். அதில் வெளிப்படும் கருத்துக்களை ஏனைய குழுவினருடன் கலந்துரையாடுங்கள்.

குழு : 1 ஆறுநாட்களும் படைத்தவற்றை சித்திரமாக வரையுங்கள்.

குழு : 2 இறைவனுடைய படைப்புக்களில் பின்வருவனவற்றை வகைப்படுத்துங்கள்.

- ஆகாயச்சுடர்கள் விலங்குகள், பூக்கள், கனிகள், மரக்கறிகள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல் :**

குப்பைகளை அகற்றுவதில் ஈடுபடுங்கள்

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 6.1.2** : இறைவன் பலவித பெறுமதிமிக்க படைப்புக்களை எமக்கு தந்துள்ளார் என அறிவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- இறைவன் படைத்துள்ள ஆகாயச்சுடர்களையும் விலங்கினங்களையும் அட்டவணைப்படுத்துவர்.
- தாவரங்களின் விருத்தியானது இறைவனின் செயற்பாடு என்பதை ஏற்றுக்கொள்வர்.
- அவதானத்துடன் வினாக்களுக்கு விடை எழுதுவர்.
- படைப்பினூடாக இறை மகிமை வெளிப்படுகின்றது என்பதை விசுவாசிப்பர்.
- படைப்புக்களுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 இல் உள்ள பாடலை பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இறைபடைப்புக்களைப் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

    - இருள் நீக்கும் சூரியனையும் சந்திரனையும் இறைவன் படைத்துள்ளார்.
    - கடல், நதி, நீர்வீழ்ச்சிகள் இறைவனின் பெறுமதியான படைப்புக்கள்.
    - பல்வேறு விலங்கினங்களை இறைவன் படைத்துள்ளார்.
    - இனிய ஓசையெழுப்பும் பறவைகள் இறைபடைப்பின் மகத்தான கொடைகள்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

    - அனைத்து ஆகாய சுடர்களையும் இறைவன் படைத்தார்.
    - இறைவன் தாவரங்களை விருத்தியடைய செய்கிறார்.
    - இறைவனின் முழு படைப்புக்களும் பயன் தரக்கூடியன.
    - விலங்குகளின் மூலமாக மனிதன் பல்வேறு விடயங்களை கற்றுக்கொள்கின்றான். (உ-ம் மகிழ்ச்சி, அன்பு)

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (தொ.நூ 1: 6-25, 2:15)
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1
## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- **தொ.நூ. 1 : 6-25, 2 : 15** திருவிவிலியப் பகுதியை நன்கு வாசியுங்கள்.

குழு : 1 வாசிக்கப்பட்ட திருவிவிலிய பகுதிக்கிணங்க பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

- எமக்கு ஒளிதருவதற்காக இறைவன் படைத்துள்ள ஆகாய சுடர்கள் யாவை?
- ஆகாய சுடர்களின் பயன்கள் யாவை?
- விதைதரும் செடிகளையும் பழமரங்களையும் எத்தனையாம் நாள் படைத்தார்?
- விலங்குலகில் பறவைகளுக்கு இறைவன் என்ன கூறினார்?
- ஒவ்வொரு நாளின் படைப்பின் பின்னர் இறைவன் அவற்றை எவ்வாறு கண்டார்?

குழு : 2 இறைவன் படைத்த ஆகாய சுடர்களையும் விலங்கினங்களையும் அவற்றின் பயன்களையும் நிரல்படுத்தி அட்டவணைப்படுத்துக.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

## இணைப்பு 2
## பாடல்

துதி செய் மனமே
எம்மைப் படைத்த கர்த்தரை
வானம் பூமி சமுத்திரம்
உண்டாக்கினவர் அவரே (துதி செய்)

பகலை ஆளும் சூரியன்
இரவை ஆளும் சந்திரன்
நட்சத்திரங்கள் யாவும்
படைத்த கர்த்தர் அவரே (துதி செய்)

துதிசெய் மனமே துதிசெய்
யாவும் படைத்த கர்த்தரை
புல்பூண்டு மரங்கள்
செடிகள் மலர்கள் கனிகள் (துதி செய்)

சகல ஜாதி பறவை
சகல ஜாதி மிருகம்
ஊரும் பிராணி யாவும்
படைத்த கர்த்தர் அவரே (துதி செய்)

துதிசெய் மனமே துதிசெய்
யாவற்றிற்கும் துதிசெய்
தமது சாயலாக எம்மைப்
படைத்தார் துதிசெய் (துதி செய்)

**வீட்டுச் சூழல் :**

விலங்கினங்களை அன்புடன் பராமரிப்பதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 1:0** : இறைவனே படைப்பிற்கெல்லாம் மூலகாரணம் என விசுவாசிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 6.1.3** : இறைவனால் மனிதன் படைக்கப்பட்டவன் என்பதற்கு நன்றி செலுத்தி படைப்புக்களின் பாதுகாவலனாக செயற்படுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- உலக படைப்புக்களின் சிகரம் மனிதன் என்பதற்கான தகவல்களை சேகரிப்பர்.
- இறைபடைப்புக்களை பாதுகாக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஆக்கபூர்வமான சுவரொட்டிகள் மூலமாக படைப்புக்கள் பற்றிய தமது பொறுப்புக்களை எடுத்துக்காட்டுவர்.
- எமது வாழ்வானது உலகத்தினுள் பாதுகாக்கப்பட வேண்டும் என விசுவாசிப்பர்.
- சூழல் பாதுகாப்பில் ஒன்றித்து செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- கண்களை மூடி அமைதியாக தம்மிடம் காணப்படும் பெறுமதியான மூன்று குணங்களை பற்றி தியானிப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- மாணவருக்கு A4 தாள்களை கொடுத்து மூன்று குணங்களை எழுதுமாறு அறிவுறுத்துங்கள்.
- பெருவிரல் அடையாளம் எடுப்பதற்கு மையைப் பூசி பெருவிரல் அடையாளத்தை A4 தாளில் பதித்துக்கொள்ள உதவுங்கள்.
- தமது அருகிலிருக்கும் மாணவர்களுக்கு A4 குறிப்புக்களை மாற்றிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதனடிப்படையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - இறைபடைப்பில் மனிதன் பெறுமதிமிக்கவன்.
    - எம் ஒவ்வொருவரிடமும் பொது பண்புகள் காணப்படுகின்றன.
    - எம் ஒவ்வொருவரிடமும் தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.
    - உலக படைப்புக்களின் சிகரம் மனிதன் ஆவான்.
    - அனைத்து தொழில்களும் ஆற்றல்களும் இறைவனின் கொடைகள்.
    - விலங்கினங்களை பாதுகாத்தல் மனிதனின் பொறுப்பாகும்.
    - இறைவன் தந்துள்ள ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
    - பிள்ளைகளின் வாழ்வானது சமுதாயத்தால் பாதுகாக்கப்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (தொ.நூ. 1: 27-28, 2: 15, தி.பா.19:1-2)
- சமூகத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்த நாளிதழ் செய்திகள்
- விலங்கினங்களின் பாதுகாப்பு, அருகிவரும் விலங்கினங்கள் பற்றிய நாளிதழ் தகவல்.
- இயற்கை அழிவுகளை காட்டும் படங்கள்
- கைவிரல் அடையாளம் பதிப்பதற்கு தேவையான வர்ணங்கள், மை, நீர் பாத்திரம், கத்தரிக்கோல், A4 தாள்.
- பலவித தொழில்களைக் காட்டும் படங்கள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- உங்களுக்கு கொடுக்கப்பட்ட திருவிவிலியப் பகுதியை நன்கு வாசியுங்கள்.
  **தொ.நூ. 1: 27-28, 2:15, தி.பா. 19:1-2**
- வழங்கப்பட்டுள்ள சித்திரங்கள், படங்கள், செய்திக்கடிதம் போன்றனவற்றை அவதானமாக கற்றுக்கொள்ளுங்கள்.

குழு : 1 உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு தொழில்கள் பற்றிய சித்திரம், புகைப்படம் போன்றனவற்றைக் கொண்டு அதன் மூலமாக சமுதாயம் பெறும் சேவைகளை நிரல்படுத்துங்கள்.

குழு : 2 உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இறைபடைப்புக்களில் விலங்கு உலகில் அழிந்து வரும் விலங்குகளைப் பாதுகாத்தல் பற்றிய கடிதமொன்றை எழுதுங்கள்.

குழு : 3 உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நாளிதழ் செய்திகளின் துணையுடன் பிள்ளைகளின் வாழ்வு சமுதாயத்தில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான ஆக்கபூர்வமான மாதிரி தயாரியுங்கள்.

குழு : 4 உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இயற்கை அழிவுகள் பற்றிய சித்திரங்களையும் படங்களையும் உபயோகித்து இறைபடைப்பை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது தொடர்பாக நாளிதழ் ஒன்றுக்கு கடிதமொன்றை வரையுங்கள்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல் :**

எப்பொழுதும் பாதுகாப்புடன் வாழ்வதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.2.1** : இயேசுவின் பிறப்பு மிகச் சிறப்பானது என விளங்கிக் கொள்வர்.

**பாடவேளை** : 04

**கற்றல் பேறு** :

- இயேசுவின் பிறப்பைப் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.
- இயேசு மீட்பர் என ஏற்றுக்கொள்வர்.
- இயேசுவின் பிறப்பை நாடகமாக நடித்துக் காட்டுவர்.
- இறை தொனிக்கு பணிவுடன் கீழ்ப்படிவர்.
- ஒன்றிணைந்து இறைவனுக்கு துதி செலுத்தி வழிபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இயேசுவின் பிறப்பை காட்டும் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- படங்களின் துணையுடன் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - குழந்தை இயேசு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார்.
  - குழந்தை இயேசுவை முதலில் பார்க்க சென்றவர்கள் இடையர்கள்.
  - அரசர் விசேட பரிசில்களை குழந்தை இயேசுவுக்கு கொடுத்தனர்.

(25 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(85 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப்படுத்துங்கள்.

  - காபிரியேல் வானதூதர் இயேசுவின் பிறப்பை மரியாளுக்கு முன்னறிவித்தல். லூக் 1 : 26 - 31
  - மரியாளும் யோசேப்பும் பெத்லகேமுக்கு செல்லல். லூக் 2 : 1 - 5
  - பெத்லகேமில் மாட்டுத்தொழுவத்தில் இயேசு பிறத்தல். லூக் 2 : 6 - 7
  - இயேசுவின் பிறப்பு இடையர்களுக்கு அறிவிக்கப்படல் லூக் 2 : 8 - 14
  - இடையர்களின் பிரதிபலிப்பு. லூக் 2 : 15 - 20
  - அரசர்களின் வருகை மத் 2 : 1 - 12
  - இயேசுவின் பிறப்பால் இன்று சமூகத்திற்கு கிடைக்கும் செய்தி.

(50 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் (லூக்கா 1:26-31, 2:1-7, 2:8-20, மத்தேயு 2:1-12)
- இயேசுவின் பிறப்பை காட்டும் படங்கள் (இடையர், அரசர், விண்தூதாகள்)
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள திருவிவிலியப் பகுதியை நன்கு வாசியுங்கள்.
  (லூக்கா 1:26-31, 2:1-7, 2:8-20 மத்தேயு 2:1-12)
- இயேசுவின் பிறப்பு பற்றிய நாடக பிரதியொன்றை தயார் செய்யுங்கள்.
- எழுதப்பட்ட நாடக பிரதியை முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

கிறிஸ்மஸ் மகிழ்வைத் தேவைப்படுவோருடன் பகிர்ந்துகொள்வதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்

**தேர்ச்சி மட்டம் 6.2.2 :** இயேசுவின் இளமைக் காலத்தை வாழ்வுக்கு முன்மாதிரியாகக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- இயேசு 12 வயதில் பாஸ்கா விழாவை கொண்டாட சென்ற நிகழ்வை விபரிப்பர்.
- இயேசு இறை மனித விருப்பங்களை மேற்கொண்டு செயற்பட்டார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- இயேசுவைப் போன்று எமது செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றி சஞ்சிகையொன்றுக்கு கடிதம் எழுதி முன்வைப்பர்.
- இயேசுவைப் போல சிறுபருவத்திலிருந்தே இறை உறவுடன் வாழ்வர்.
- குழுக்களாக ஒன்றிணைந்து செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

gbKi w 1

- இயேசு 12 வயதில் எருசலேம் ஆலயத்தில் போதகர் மத்தியில் உரையாடலில் ஈடுபடும் சித்திரத்தை காட்சிப் படுத்துங்கள்.
- படத்தை பயன்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - இயேசு போதகர்களுடன் கலந்துரையாடினார்.
  - இந் நிகழ்வானது எருசலேம் ஆலயத்தில் இடம்பெற்றது.
  - இந் நிகழ்வின் போது இயேசுவின் வயது 12 ஆகும்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.

  - யூத பழக்கவழக்கங்களை மதித்து இயேசுவின் பெற்றோர் செயற்பட்டனர்.
  - சிறு பருவத்திலிருந்தே இயேசு இறைவனுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார்.
  - இயேசு இறைவனதும் மனிதனதும் விருப்புக்கேற்ப வளர்ந்து வந்தார்.
  - இயேசுவைப் போல நாமும் இறைவனுடன் உறவு கொண்டு செயற்பட வேண்டும்.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 2 : 39 - 40, 2 : 41 – 52)
- பொருத்தமான சித்திரம் (12 வயதில் இயேசு எருசலேம் ஆலயத்தில் காணப்படும் படம்)
- A 4 தாள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளை பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

குழு : 1 லூக்கா 2 : 39 - 52 வாசித்து பின்வரும் தலைப்புக்கு பொருத்தமாக நாளிதழ் ஒன்றுக்கு கடிதம் வரைக.

“இயேசு இறை இரக்கத்துடனும் மனித நேயத்துடனும் வளர்ந்தார்.”

குழு : 2 லூக்கா 2 : 39 – 52 வாசித்து பின்வரும் தலைப்புக்கு ஏற்ப சஞ்சிகையொன்றுக்கு கடிதம் வரைக.

“இயேசுவைப்போன்று நாமும் இறை உறவுடன் வாழ்வோம்.”

குழு : 3 லூக்கா 2: 39-52 ஏற்ப பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. இயேசுவின் 12வது வயதில் நிறைவேற்றப்பட்ட யூத வழக்கம் ஒன்றை பெயரிடுக.
2. இயேசு இறைவனின் இரக்கத்தைப் பெற்றார் என்பதை குறிப்பிடும் திருவிவிலிய பகுதியை குறிப்பிடுக.
3. விழா நிறைவில் இயேசு எவ்வாறு செயற்பட்டார்?
4. இயேசுவை தேடிவந்த பெற்றோருக்கு அவர் கூறிய மறுமொழி என்ன?
5. நாளாந்த வாழ்வில் இறை உறவுடன் வாழ்வதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விபரிப்பர்.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

ஞாயிறு தோறும் ஓய்வுநாட் பாடசாலைக்கு செல்வதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்

**தேர்ச்சி மட்டம் 6.2.3 :** இயேசு துன்பமும் சிலுவையில் அறையப்படும் நிகழ்வுகளையும் கற்பர்.

**பாடவேளை** : 04

**கற்றல்பேறு** :

- இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்னான நிகழ்வுகளை வரிசைப் படுத்துவர்.
- எமது பாவங்களுக்காக இயேசு உயிர் நீத்தார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- சுவரேடு ஒன்றுக்கு ஆக்கபூர்வமான கடிதம் எழுதுவர்.
- இயேசுவின் சிலுவை பலியால் நாம் மீட்பு பெற்றோம் என்பதை விசுவாசிப்பர்.
- இறைவனை ஒன்றிணைந்து துதித்து வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவருக்கு பாடல் பிரதிகளை வழங்குங்கள். இணைப்பு 2 பாடலை பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடும்போது மாணவரின் உணர்வுகளை பற்றி உரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

    - இயேசு கல்வாரி மலையில் தனது வாழ்வைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.
    - தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர், பரிசேயர்,சதுசேயர் மற்றும் சாதாரண மக்களும் சிலுவையில் அறைவதற்கு பங்களிப்பு வழங்கினர்.
    - இயேசுவின் தியாகத்தால் எமது பாவங்களுக்கு விடுதலை கிடைத்தது.
    - இயேசு எமக்காக பல துன்பங்களை அனுபவித்தார்.

(25 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 2) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(85 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப்படுத்துங்கள்.

    - சிரேனே ஊர் சீமோன் சிலுவையை சுமந்து செல்ல இயேசுவுக்கு உதவினார். (மத் 27 : 32)
    - இயேசு பல்வேறு பாடுகளையும் துன்பங்களையும் அனுபவித்தார். (மத் 27: 32 - 50)
    - இயேசு சிலுவையில் மொழிந்தவைகளை ஏளனம் செய்தனர்.
    - எமது பாவங்களுக்காக இயேசு எல்லா துன்பங்களையும் தாங்கினார்.
    - இயேசுவின் பணிகளை செய்யும் போது ஏற்படும் வேதனைகளை பொருட்படுத்தாது வாழவேண்டும்.

(50 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (மத்தேயு 27 : 32 - 50)
- A 4 தாள், பென்சில்
- இணைப்பு 1, இணைப்பு 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1
## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

குழு : 1 மத்தேயு 27:32-50 திருவிவிலியப் பகுதியை வாசியுங்கள்.
பின்வரும் தலைப்புக்கு பொருத்தமான சித்திரமொன்றை வரைக.
*''சிரேனே ஊர் சீமோன் இயேசுவின் துன்ப நிகழ்வுகளுடன் தொடர்பு கொண்ட விதம்''*

குழு : 2 மத்தேயு 27:32-50 திருவிவிலியப் பகுதியை நன்கு வாசித்து பின்வரும் தலைப்புக்கு பொருத்தமான சுவரேட்டுக்கு கடிதம் வரைக.
*''இயேசு சிலுவையில் மொழிந்தவைகளும் மக்களின் மறுமொழிகளும்''*

- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

## இணைப்பு 2
## பாடல்

வாழ்நாள் முழுதும் உம்மைப் போற்றுகிறேன்
எந்தன் ஆருயிர் ஆண்டவரே!
நன்றியால் உம்மை நான் என்றும் வாழ்த்துகிறேன்
பலியால் என்னை மீட்டவரே

பாரிய சிலுவையிலே கொடும் பாவியாய் மாண்டவரே
சிந்திய இரத்தமெல்லாம் என் மேனியில் ஓடுதையா
என்னை முற்றுமே மாற்றுதையா - வாழ்

நீர் சிந்திய கண்ணீரே நீர் கெஞ்சிய வார்த்தைகளே
என் இதயத்தில் பதிந்தமையால்
புதிதாகவே மாறியதே - வாழ்
எனக்காய் பலியானவரே எனக்காகவே மாண்டவரே
என்னையே நான் தருவேன்
வாழ்நாளெல்லாம் நான் வருவேன் - வாழ்

**வீட்டுச் சூழல்**

தவறு செய்யும் போது மன்னிப்பை பெற்றுக்கொள்வதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்

**தேர்ச்சி மட்டம் 6.2.4 :** இயேசுவின் உயிர்ப்பால் ஒளி பெறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- இயேசுவின் உயிர்ப்புக்கு பின் நிகழ்ந்த நிகழ்வுகளை சேகரிப்பர்.
- இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- இயேசுவின் உயிர்ப்பின் நிகழ்வை உரையாடுவர்.
- இயேசுவின் உயிர்ப்பால் பெற்றுக்கொண்ட புதுவாழ்வை விசுவாசத்துடன் பகிர்ந்து கொள்வர்.
- உயிர்ப்பின் செய்தியை மற்றவருக்கு எடுத்துரைப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவருக்கு ஒவ்வொரு பூக்கள் வழங்குங்கள்.
- சிட்டி விளக்கை ஏற்றி தியானத்தில் ஈடுபடுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - இயேசு எமக்காக சிலுவையில் அறையப்பட்ட முறைகள்.
  - இயேசு மூன்றாம் நாள் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்.
  - இயேசுவின் உயிர்ப்பால் எமக்கு புதிய எதிர்பார்ப்பு உண்டு.
  - ஒளிரும் தீபம் போல எமது வாழ்வும் ஒளி வீச வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.

  - வாரத்தின் முதலாம் நாள் இயேசு உயிர்த்தார்.
  - இயேசுவைப் பார்க்கச் சென்றவர்கள் வெற்று கல்லறையை கண்டனர்.
  - விண்தூதரின் வழிகாட்டலுடன் நற்செய்தியை பிறருக்கு அறிவித்தனர்.
  - இயேசுவின் உயிர்ப்பால் மகிழ்வடைந்தனர்.
  - நாமும் இயேசுவுக்கு சான்று பகர்வோம்.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (மத்தேயு 28: 1 - 10)
- அலரிப் பூ, சிட்டி விளக்குகள், திரி, எண்ணெய், தீப்பெட்டி
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- மத்தேயு 28:1-10 திருவிவிலியப் பகுதியை நன்கு வாசித்து தியானம் செய்யுங்கள்.
- மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்குச் சென்றபோது நடைபெற்ற நிகழ்வை ஆக்கபூர்வமான உரையாடலாக தயாரியுங்கள்.
- எழுதப்பட்ட உரையாடலை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயாராகுங்கள்.

## இணைப்பு 2

- தேவாரம் (பொருத்தமான தேவாரமொன்றை தெரிவு செய்து பாடுங்கள்)

**வீட்டுச் சூழல்**

ஆறுதலற்ற நண்பருக்கு ஆறுதல் வழங்குவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.2.5** : இயேசு உயிர்பெற்றெழுந்த நிகழ்வுகளை வரிசைப்படுத்துவர்.

**பாடவேளை** : 04

**கற்றல் பேறு** :

- இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கான சான்றுகளை சேகரிப்பர்.
- இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்ந்தோரின் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுவரொட்டி தயாரிப்பர்.
- இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிப்பர்.
- இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- கிறிஸ்தவரின் பாஸ்கா விழா பற்றிய தகவல்களை கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

    - கிறிஸ்தவ பாஸ்கா இயேசுவின் உயிர்த்தெழுதல் நினைவு கூறும் நாள்.
    - இயேசு மரணத்தைத் தோற்கடித்து வெற்றிகொண்ட நாள்.
    - கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறிய வெற்றியின் நாள்

(30 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(80 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

    - இயேசுவின் உயிர்ப்பிக்கு பெண்கள் சான்று பகர்ந்தனர். (லூக்கா 24:1-11)
    - நிகழ்ந்தனவற்றை பார்க்க பேதுரு கல்லறைக்கு சென்றார். (லூக்கா 24:12)
    - எம்மாவூர் சென்ற சீடர்களுக்கு இயேசு காட்சியளித்தார். (லூக்கா 24:13-35)
    - இயேசு பதினொரு சீடர்களுக்கும் காட்சியளித்தார். (லூக்கா 24:36-40)
    - நாமும் இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்வோம்

(50 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 24 : 1 - 40)
- பிரிஸ்டல் மட்டை, A 4 தாள், நிற பேனைகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளை பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

குழு : 1 திருவிவிலிய பகுதியை நன்கு வாசியுங்கள். லூக்கா 24: 1-12
இயேசுவின் உயிர்ப்புக்கான சான்றுகளை சேகரித்து சுவரொட்டி ஒன்றைத் தயாரியுங்கள்.

குழு : 2 திருவிவிலிய பகுதியை நன்கு வாசியுங்கள். லூக்கா 24: 13-35
எம்மாவூர் சென்ற பயணத்தில் நீரும் ஒருவர் எனக் கருதி அன்றைய நிகழ்வின் விபரங்களைக் குறித்து உங்கள் நண்பருக்கு கடிதம் ஒன்று எழுதுங்கள்.

குழு : 3 திருவிவிலிய பகுதியை நன்கு வாசியுங்கள். லூக்கா 24: 36-40)
பதினொரு சீடர்களுக்கு இயேசு காட்சி கொடுத்த நிகழ்வை உரையாடலாக எழுதுக.

- உங்களது ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

ஞாயிறுதோறும் இறைவழிபாட்டில் பங்குபெறுவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 2:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்

**தேர்ச்சி மட்டம் 6.2.6** : இயேசுவின் உயிர்ப்பின் வெற்றியை தமது வாழ்வுக்கு சுவீகரித்து கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- 'இயேசுவின் உயிர்ப்பு நிலைவாழ்வுக்கான வழி' என்பதற்கான கருத்துக்களை சேகரிப்பர்.
- இறை உறவில் பங்கேற்று நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள முடியும் என ஏற்றுக் கொள்வர்.
- ஆக்கபூர்வமான கடிதம், உள்ளத்தின் வெளிப்பாடு, கவிதை போன்றனவற்றை தயாரிப்பர்.
- இயேசுவின் மூலமாக புதுவாழ்வு உண்டு என்பதை விசுவாசிப்பர்.
- நாம் பெறும் நிலைவாழ்வுக்காக இணைந்து இறைவனை துதிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 ஐ வழங்குங்கள்.
- பாடலை பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - எமது வாழ்வை இறைவனுக்கு ஒப்படைக்க வேண்டும்.
  - எமது பாவங்களுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும்.
  - கிறிஸ்தவர்கள் இயேசுவின் வழியில் பயணிக்க வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.

  - இயேசுவின் வாழ்வின் தியாகத்தால் நிலைவாழ்வு கிடைக்கும்.
  - இயேசுவின் மூலமாக மட்டுமே நிலைவாழ்வு கிடைக்கின்றது.
  - நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்வதே கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பாகும்.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடல்
- பிரிஸ்டல் மட்டை, A 4 தாள், நிற பேனைகள்
- இணைப்பு 1, இணைப்பு 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1
## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் தலைப்புக்களில் விருப்பமான தலைப்பொன்றை தெரிவு செய்யுங்கள்.

- ''இயேசுவால் எனக்கு கிடைக்கும் நிலைவாழ்வு''
- ''கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு''
- ''நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?''

நீங்கள் தெரிவு செய்த தலைப்புக்கேற்ப சஞ்சிகை ஒன்றுக்கு பொருத்தமான கடிதம் / உள்ளத்தின் வெளிப்பாடு / கவிதை தயாரியுங்கள்.

- உங்களது ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்

## இணைப்பு 2
## பாடல்

பல்லவி

தந்தேன் என்னை இயேசுவே
என்றுமே உமக்கே நான்

அனுபல்லவி

உன்றனுக்கு ஊழியம் செய்ய
தந்தேன் என்னைத் தாங்கியருளும் - தந்தேன்

சரணங்கள்

ஜீவகாலம் முழுவதும்
தேவப்பணி செய்திடுவேன்
பூவிற்கடும் போர் புரிந்து
காவும் உன்றன் கரத்தில் வைத்து – தந்தேன்

உன்றன் சித்தம் செய்திடுவேன்
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்கு காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன் - தந்தேன்

**வீட்டுச் சூழல்**

வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது இறைவனிடம் வாழ்வை ஒப்படைப்பதில் பிள்ளைகளுக்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.3.1** : இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வால் தூயஆவியானவரை அறிவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- இயேசுவின் திருமுழுக்கு பற்றிய கருத்துக்களை சேகரிப்பர்.
- இயேசு இறைமகன் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- அவதானமாக வினாக்களுக்கு விடையளிப்பர்.
- இறை தொனிக்கு செவிமடுப்பர்.
- தூய ஆவியின் வழிகாட்டலுக்கு ஏற்ப இணைந்து வாழ்வர்.
- நாம் பெறும் நிலைவாழ்வுக்காக இணைந்து இறைவனை துதித்து வழிபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இயேசுவின் திருமுழுக்கை காட்டும் படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர் கண்டனவற்றிலிருந்து கலந்துரையாடுங்கள்.

  - இயேசு திருமுழுக்கு பெற்றார்.
  - யோவான் இயேசுவுக்கு தண்ணீரால் திருமுழுக்கு கொடுத்தார்.
  - யோவான் இயேசுவுக்கு யோர்தான் ஆற்றில் திருமுழுக்குக் கொடுத்தார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாற்கு 1: 9-11 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.

  - திருமுழுக்கு யோவான் யோர்தான் ஆற்றில் திருமுழுக்குக் கொடுத்தார்.
  - இயேசு திருமுழுக்கு யோவானால் திருமுழுக்கு பெற்றார். (மாற்கு 1: 9)
  - தூய ஆவி புறாவைப்போல் தோன்றினார் (மாற்கு 1: 10)
  - இறைவனின் குரல் வானத்திலிருந்து கேட்டது(மாற்கு1: 11)
  - தூயதிரித்துவம் பிரசன்னமாயிருந்தது.

(25 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (மாற்கு 1:9-11)

- இயேசுவின் திருமுழுக்கை காட்டும் படங்கள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- மாற்கு 1: 9-11 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
  1. இயேசுவுக்கு திருமுழுக்கு கொடுத்தது யார்?
  2. இயேசு திருமுழுக்குப் பெற்ற இடம் எது?
  3. அச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட விசேட நிகழ்வு என்ன?
  4. திருமுழுக்குப் பெற்ற பின் வானத்திலிருந்து ஒலித்த தொனி என்ன?
  5. இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வின் மூலம் நீங்கள் கற்றுக்கொண்டவைகளை குறித்து உங்கள் நண்பருக்கு கடிதமொன்று வரைக.
- வினாக்களுக்குரிய விடைகளை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

தூய ஆவியின் வழிநடத்தலை தேடுவதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.3.2** : தூய ஆவியின் வழிகாட்டலுடன் செயற்படுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- இயேசு முகங்கொடுத்த சோதனைகளை விபரிப்பர்.
- இறைவார்த்தைக்கூடாக தீர்வு உள்ளதென ஏற்றுக்கொள்வர்.
- இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளைக் காட்டும் சுவரொட்டி தயாரிப்பர்.
- இறைவார்த்தையால் சோதனைகளிலிருந்து விடுதலை பெறமுடியும் என விசுவாசிப்பர்.
- தூயஆவியின் வழிநடத்துதலைப் பெற்றுச் சமூகத்தில் புதுவாழ்வு வாழ்வர்

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மாணவர் முகங்கொடுத்த சோதனை ஒன்றை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடுங்கள்.

  - இயேசு விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்.
  - இயேசு அலகையால் சோதிக்கப்பட்டார்.
  - இறைவார்த்தைகளால் இயேசு அலகைக்கு பதில் கொடுத்தார்.
  - நாமும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறோம்.
  - தூய ஆவியானவரின் வழிநடத்துதலால் சோதனைகளை வெற்றி கொள்ள வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள். (லூக்கா 4:1-13)
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

  - தூயஆவியானவரால் இயேசு பாலைநிலத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். ( லூக்கா 4 : 1)
  - இயேசு சோதனைகளுக்கு முகம் கொடுத்தார். ( லூக்கா 4 : 2 - 13)
  - இயேசு இறைவார்த்தைகளால் சோதனைகளை வென்றார்.
  - நாமும் சோதனைகளுக்கு உள்ளாகின்றோம்.
  - இறைவார்த்தைகளால் சோதனைகளை வெற்றி கொள்ள வேண்டும்.
  - எப்போதும் இறைவழிநடத்துதலை நாட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 4:1-13)
- கடதாசி, பேனை, பென்சில்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- (லூக்கா 4:1-13) திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளையும் இறைவார்த்தையால் அவற்றை வெற்றி கொண்ட முறையையும் எடுத்துக்காட்டும் சுவரொட்டி தயாரியுங்கள்.
- இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளையும் அவரது மறுமொழியையும் அட்டவணைப் படுத்துங்கள்.
- ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

சோதனைகளை இறைவார்த்தையால் வெற்றிகொள்ள வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 3:0** : ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.3.3 :** தூய ஆவியின் செயற்பாட்டால் துணிவு பெறுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- தூய ஆவியானவர் எமக்கு தரும் அழைப்பை விபரிப்பர்.
- தூய ஆவியானவரின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்வர்.
- கேலிச் சித்திரம் (Cartoon) ஒன்றை தயாரிப்பர்.
- தூய ஆவியானவர் எம்மை இறைபணிக்காக அழைக்கிறார் என்பதை விசுவாசிப்பர்.
- நற்செய்தியை மற்றவருக்கு அறிவிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- நற்செய்தி கைப்பிரதிகளை மாணவருக்கு வழங்குங்கள்.
- கைப்பிரதி தொடர்பில் பின்வரும் கருத்துக்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - நற்செய்தி கூட்டங்கள் பல இடங்களில் நடைபெறுகின்றன.
  - நற்செய்தி கூட்டத்தில் பலர் பங்கு பெறுகின்றனர்.
  - நற்செய்தி கூட்டத்தின் மூலம் இயேசுவை அறிந்து கொள்ளலாம்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- தி.தூ.பணி 8: 26-40 யை வகுப்பில் வாசியுங்கள்.
- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

  - தூயஆவியானவர் பிலிப்புவை காசாவுக்கு அழைத்துச் சென்றார். (தி.பணி. 8 : 26)
  - பிலிப்பு புற இனத்தவர் ஒருவரைச் சந்தித்தார்.(தி.பணி. 8:27)
  - தேரில் இருந்தவர் எசாயாவின் நூலை வாசித்துக் கொண்டிருந்தார். (தி.பணி. 8 : 28)
  - பிலிப்பு அவருக்கு அப்பகுதியை விளக்கினார். (தி.பணி. 8 : 30 - 36)
  - புற இனத்தவன் இயேசுவை அறிந்து கொண்டான். (தி.பணி. 8 : 37)
  - பிலிப்பு புற இனத்தவருக்கு திருமுழுக்கு கொடுத்தார். (தி.பணி. 8 : 38)
  - தூய ஆவியானவர் எம்மை பணிக்கு அழைக்கிறார்.
  - இயேசுவை நாம் சமுதாயத்துக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் ( தி.தூ.பணி 8 : 26 - 40)
- நற்செய்தி கூட்டம் தொடர்பான கைப்பிரதிகள்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- திருவிவிலிய பகுதியை வாசித்து தியானம் செய்யுங்கள். ((தி.ப.8:26-40)
- அதற்கேற்ப ஆறு சந்தர்ப்பங்களைக் கொண்ட கேலிச் சித்திரம் ஒன்றை தயாரியுங்கள்.
- தயாரிக்கப்பட்ட கேலிச் சித்திரத்தை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

நற்செய்திக் கூட்டங்களில் பங்குபெறச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.1** : இறையரசில் அன்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- நல்ல சமாரியன் உவமை வாயிலாக அன்பைப் பற்றிய கருத்துக்களை விளக்கிங் கொள்வர்.
- உண்மையான அன்பானது பெறுமதிமிக்க கிறிஸ்தவ விழுமியங்களில் ஒன்று என்பதை ஏற்றுக்கொள்வர்.
- உண்மையான கிறிஸ்தவ அன்பு தொடர்பான பாடலை ஆக்கம் செய்வர்.
- அன்பின் மூலமாக சவால்களை வெற்றிகொள்ளலாம் என்பதை விசுவாசிப்பர்.
- பொதுநலத்துடன் செயற்படுவதன் மூலம் பிறரில் அன்பு காட்டுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- பாடலை இணைப்பு 2 பொருத்தமான தாளத்திற்கேற்ப வகுப்பறையில் முன்வையுங்கள்.
- கடதாசியையும் பேனையையும் கொடுத்து அன்பைப் பற்றிய கருத்துக்களை எழுதி வகுப்பறையில் வைப்பதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில ஈடுபடுங்கள்.

  - அன்பு இறைவனால் கிடைக்கப்பெறும் கொடை.
  - அன்பு பெறுமதிமிக்க கிறிஸ்தவ விழுமியமாகும்.
  - உலகில் வாழும் அனைவருக்கும் அன்பு அவசியம்.
  - பிறருக்கு உதவுவதன் மூலம் அன்பை வெளிகாட்டலாம்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(65 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.

  - நல்ல சமாரியனின் உவமை இயேசு கற்பித்த முக்கியமான உவமையாகும். லூக் 10:25-37
  - யூத சமாரிய இனத்தவரிடையே காணப்பட்ட பேதங்கள்.
  - பரிசேயர் மற்றும் லேவியர் போன்ற சமயக் குழுக்கள் பேரன்பின் உண்மைப்பொருளை விளங்கிக்கொள்ளாமை.
  - நாம் சந்திக்கின்ற ஒவ்வொருவரிலும் நாம் எப்போதும் கரிசனை காட்டவேண்டும்.

- வேறுபாடின்றி அனைவரையும் அன்பு செய்வதன் முக்கியத்துவம்.
- உண்மை கிறிஸ்தவ அன்பை இயேசுவின் முன்மாதிரியின்படி எமது வாழ்வில் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (லூக்கா 10:25-37)
- கடதாசி, மாக்கர் பேனை
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- லூக்கா 10: 25 - 37 திருவிவிலிய பகுதியை அவதானமாக வாசியுங்கள்.
- இத்திருவிவிலிய பகுதியைப் பின்பற்றி 'உண்மைக் கிறிஸ்தவ அன்பு' தொடர்பான பாடலை உருவாக்குங்கள்.
- பொருத்தமான தாளத்திற்கேற்ப வகுப்பறையில் பாடுவதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.

**இணைப்பு 2**

பாடல்

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
என் சகோதரன்//

வறுமையில் வாழ்பவன் என் நண்பன்//
வறுமையில் இருப்பவன் சகோதரன்
அல்லல்படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்//

பிறர்குலம் சேர்ந்தாலும் என் நண்பன்//
பிற இனம் சேர்ந்தாலும் சகோதரன்//
பிறமொழி பேசினாலும் என் நண்பன்
பிற மதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்//

**வீட்டுச் சூழல்**

எப்போதும் அன்புடன் செயற்படுவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.2 :** இறையரசின் உறுப்பினராக விசுவாச பலத்தை அனுபவிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- பார்வையற்றவர் சுகம்பெற்ற சம்பவத்தை விபரிப்பர்.
- விசுவாச வாழ்வை வாழவேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- விசுவாசத்தை வளர்க்கும் வகையிலான மன்றாடலை எழுதுவர்.
- விசுவாசத்தின் மூலம் புதுமையான அனுபவத்தை பெறலாம் என விசுவாசிப்பர்.
- இறை விசுவாசம் மற்றவர்களில் வளர்வதற்காக செயற்படுவர். இணைப்பு 1

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இயேசுவின் குணமாக்கலை காட்டும் சித்திரங்களை முன்வைத்து அதைக்குறித்த கருத்துக்களை கூறுவதற்கு இடமளியுங்கள்.
- பார்வையற்றவரை குணமாக்கும் சித்திரத்தை வகுப்பில் காட்சிபடுத்தி கருத்துக்களை எழுத சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - பார்வையற்றவர் குணமடைதலில் நம்பிக்கையாயிருத்தல்.
  - இயேசு பார்வையற்றவரை அழைத்ததன் மூலமாக மிகவும் மகிழ்ச்சி உண்டாகிறது.
  - இப்புதுமைக்கு பலரும் சான்றுகள் ஆவர்.
  - பார்வையற்றவர் விசுவாசத்தால் குணமடைதல்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.
  - இயேசுவைக் கண்டதன் மூலம் பார்வையற்றவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது.
  - பார்வையற்றவரின் விசுவாசத்தால் சுகத்தைக் குறித்த அவரது எதிர்பார்ப்பு நிறைவேறியது. மாற்கு 10:47-50
  - விசுவாசமானது இறையரசின் பிரஜைகளுக்கு மிக முக்கியமான பண்பாகும்.
  - உறுதியான விசுவாசத்தின் மூலம் கிறிஸ்தவ வாழ்வில் புதுமையை அனுபவிக்கலாம்.
  - அன்றாட வாழ்வில் கிறிஸ்தவ விசுவாசத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (மாற்கு 10:46-52)
- கடதாசி, நிறப் பேனை
- இயேசுவின் குணமாக்கலை காட்டும் சில சித்திரங்கள்
- பார்வையற்றவர் ஒருவரை குணமாக்கும் பெரிய சித்திரம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- மாற்கு 10:46-52 திருவிவிலிய பகுதியை அவதானமாக வாசியுங்கள்.
- இந் நிகழ்வை அறிந்து கொள்வதனூடாக ‘‘பார்வையற்றவரைப் போன்ற விசுவாசத்தை எனக்கும் தந்தருளும்’’ எனும் தலைப்புக்கு பொருத்தமான மன்றாடலை எழுதுங்கள்.
- மன்றாடலை அனைத்து குழுவினரும் வகுப்பில் முன்வைக்க ஒழுங்கு செய்யுங்கள்.

**வீட்டுச் சூழல்**

நோயாளருக்காக வேண்டுதல் செய்வதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.3 :** இறையரசின் உறுப்பினராக மன்னிப்பு வழங்குவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- காணாமல் போன மகன் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.
- இறைவன் மனம்திரும்பும் எமக்கு மன்னிப்பை வழங்குவார் என ஏற்றுக்கொள்வர்.
- காணாமல்போன மகன் பற்றிய உவமையை ஆக்கபூர்வமாக நடித்துக்காட்டுவர்.
- மன்னிப்பு கொடுப்பதன் மூலம் வாழ்வு கட்டியெழுப்பப்படும் என விசுவாசிப்பர்.
- நாளாந்த வாழ்வில் பிறரை மன்னிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 இல் உள்ள உரையாடலை மூன்று மாணவரின் மூலமாக முன்வையுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்துமாறு கலந்துரையாடுங்கள்.
    - மன்னிப்பு முக்கியமான கிறிஸ்தவ பண்பாகும்.
    - அன்பானது மன்னிப்பை வழங்குவதற்கு ஈடுபடுத்துகின்றது.
    - கிறிஸ்தவர்களாகிய நாம் பிறரை மன்னிக்க வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.
    - மகன் தனது பங்கை பெற்றுக்கொண்டு தந்தையையும் வீட்டையும் விட்டு சென்றான். (லூக்கா 15 : 11 - 13)
    - நண்பர்களோடு சேர்ந்து அனைத்தையும் இழந்தான். (லூக்கா 15: 14)
    - தனது தவறை உணர்ந்து அதற்காக மனம் வருந்தினான். (லூக்கா 15 : 17 - 19)
    - காணாமல் போன மகன் மீண்டும் வீடு திரும்பிய போது தந்தை அவரை மன்னித்து அன்போடு ஏற்றுக்கொண்டார். (லூக்கா 15 : 20 - 24)
    - மன்னிப்பளித்தலானது இறையரசில் முக்கிய பெறுமதியாகும்.
    - மனந்திரும்பி மன்னிப்பு கேட்கும்போது இறைவன் அளவற்ற மன்னிப்பை எமக்கு தருவார்.
    - மன்னிப்பு வழங்குவதன் ஊடாக வாழ்வில் மாற்றம் பெறலாம்.
    - இறையரசின் பிரஜைகளாக மன்னிப்பு வழங்குதல் வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (லூக்கா 15:11-32)
- கடதாசி, மார்க்கர் பேனை
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- லூக்கா 15 : 11-32 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- திருவிவிலிய வெளிப்படும் கருத்துக்களை கலந்துரையாடுங்கள்.
- உவமையை நடிப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**இணைப்பு 2**

அம்மா: என்ன எமது சின்ன மகனை காணவில்லையே.

அக்கா: அம்மா இன்றைக்கு தம்பி ஒரு பிழை செய்துவிட்டார். நீங்கள் வருவீர்கள் என கட்டிலின் அடியில் ஒளிந்திருந்தான்.

அம்மா: சின்ன மகன் ஒளிந்திருக்கும் இடத்திலிருந்து இங்கே வாங்க. நடந்த எல்லாவற்றையும் இங்கே வந்து கூறுங்கள்.

தம்பி: பந்தை மேலே போட்டு விளையாடிக்கொண்டிருந்த போது பந்து பட்டு ஜன்னல் உடைந்துவிட்டது. என்னை மன்னித்து கொள்ளுங்கள்.

அம்மா: எவராலும் தவறுகள் ஏற்படலாம் மகனே! இன்று நான் உன்னை மன்னிக்கிறேன். இன்றிலிருந்து சிந்தித்து செயல்படு!

தம்பி: இனிமேல் குழப்படி செய்ய மாட்டேன் அம்மா! இறைதந்தை கூறியதுபோல இனி நான் வாழ்வேன்.

**வீட்டுச் சூழல்**

எப்போதும் மன்னிப்பு வழங்குவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.4 :** எப்போதும் இறைவனுக்கு நன்றி செலுத்தி வாழ்வர்

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- பத்து தொழுநோயாளர்களின் உவமையை விபரிப்பர்.
- எப்போதும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- இறைவனுக்கு நன்றி செலுத்தும் வாழ்த்து அட்டையை தயாரிப்பர்.
- அன்றாட வாழ்வில் 'நன்றி' என்ற சொல்லை பயன்படுத்துவர்.
- பிறரிடமிருந்து பெறும் உதவிகளுக்காக உளமார்ந்த நன்றிகளை செலுத்துவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ஐ வகுப்பறையில் முன்வையுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - நன்றி செலுத்தல் எமது வாழ்வில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய முக்கியமான பண்பாகும்.
  - நாம் பெறும் அனைத்து ஆசீர்வாதங்களுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்.
  - மற்றவர்கள் எமக்கு செய்யும் உதவிகளுக்காக நாம் எப்போதும் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- லூக் 17:11-19 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

  - தொழுநோய் பரவும் நோயாகும்.
  - இயேசுவின் காலத்தில் தொழுநோயாளர்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட முறைகள்
  - இயேவிடம் வந்த பத்து தொழுநோயாளர்களும் சுகம் பெற்றனர். (லூக்கா 17 : 12 -14)
  - சுகத்தை பெற்று இயேசுவுக்கு நன்றி செலுத்த வந்தவன் சமாரிய தொழுநோயாளன் மட்டுமே. (லூக்கா 17 : 15 -16)
  - இறையரசின் பிரஜைகளாக எப்போதும் நாம் நன்றி செலுத்தும் வாழ்வை வாழ வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (லூக்கா 17:11-19)
- பிரிஸ்டல் மட்டை, கடதாசி, மார்க்கர் பேனை
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளை பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள்**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- (லூக்கா 17:11-19) திருவிவிலிய பகுதியை அவதானமாக வாசியுங்கள்.
- இக்கதையில் குறிப்பிடப்படும் இயேசுவுக்கு நன்றி செலுத்த வந்த **சுகம் பெற்ற தொழுநோயாளர்** நீங்கள் என கருதி இயேசுவுக்கு நன்றி செலுத்தும் வாழ்த்து அட்டையை தயாரியுங்கள்.
- ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிபடுத்த ஒழுங்கு செய்யுங்கள்.

## இணைப்பு 2

## திருப்பாடல்கள் 136: 1-9

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர்.
என்றும் உள்ளது அவரது பேரன்பு.

தெய்வங்களின் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
என்றும் உள்ளது அவரது பேரன்பு.

தலைவர்களின் தலைவருக்கு நன்றி செலுத்துங்கள்.
என்றும் உள்ளது அவரது பேரன்பு.

தாம் ஒருவராய் மாபெரும் அருஞ்செயல்களைப் புரிபவர்க்கு
நன்றி செலுத்துங்கள். என்றும் உள்ளது அவரது பேரன்பு.

வான்வெளியை மதிநுட்பத்தால் உருவாக்கியவர்க்கு நன்றி
செலுத்துங்கள். என்றும் உள்ளது அவரது பேரன்பு.

கடல்மீது மண்ணகத்தை விரித்தவர்க்கு நன்றி செலுத்துங்கள்.
என்றும் உள்ளது அவரது பேரன்பு.

பெருஞ்சுடர்களை உருவாக்கியவர்க்கு நன்றி செலுத்துங்கள்.
என்றும் உள்ளது அவரது பேரன்பு.

பகலை ஆள்வதற்கென கதிரவனை உருவாக்கியவர்க்கு நன்றி
செலுத்துங்கள். என்றும் உள்ளது அவரது பேரன்பு.

இரவை ஆள்வதற்கென நிலாவையும் விண்மீன்களையும்
உருவாக்கியவர்க்கு நன்றி செலுத்துங்கள்.
என்றும் உள்ளது அவரது பேரன்பு

**வீட்டுச் சூழல்**

இறைவனால் கிடைக்கும் அனைத்து ஆசிகளுக்காகவும் நன்றி கூறுவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 4:0** : இறையரசின் விழுமியங்களை கடைப்பிடித்து ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்குவர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.5 :** தாழ்வாக வாழப் பழகுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- மன்றாடுவதற்காக சென்ற பரிசேயரும் வரி அறவிடுவோரும் பற்றிய உவமை தொடர்பான கருத்துக்களை சேகரிப்பர்.
- தாழ்வானது இறையரசின் பிரஜைகளுடைய பண்பு என ஏற்றுக்கொள்வர்.
- வரி அறவிடுபவர் எமக்கு கற்று தந்த 'தாழ்வு' எனும் தலைப்பில் சுவரொட்டி தயாரிப்பர்.
- தாழ்வின் மூலம் சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை விசுவாசிப்பர்.
- தாழ்வுடன் வாழ்வதன் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- "தாழ்வு" என்பதைப் பற்றி எழுதப்பட்ட செய்தி/ அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவருக்கு கடதாசி, மார்க்கர் பேனைகளை வழங்கிக் காட்சிப்படுத்தப்பட்டது தொடர்பாக மாணவரின் கருத்துக்களை கடதாசியில் குறிப்பிட்டு பொருத்தமாக அட்டவணைபடுத்த ஒழுங்கு செய்யுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - தாழ்வுடன் கீழ்படிதல்.
    - இயேசு தாழ்மையை குறித்து போதித்தார்.
    - தாழ்மையானது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாகும்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- லூக்கா 18: 9-14 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- மாணவருக்கு ஆய்வுப்பத்திரத்தை வழங்குங்கள். இணைப்பு 1
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.
    - இயேசுவின் காலத்தில் இருந்த பரிசேய யூத சமய குழுவினரால், வரி அறவிடுபவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக கருதப்பட்டனர்.
    - பரிசேயரின் மன்றாட்டில் பெருமை வெளிப்பட்டது (லூக்கா 18 :11 - 12)
    - வரி அறவிடுபவரின் மன்றாட்டில் தாழ்மை வெளிப்பட்டது. (லூக்கா 18:13)
    - தாழ்மையான மன்றாடல் இறைவனை அடைகின்றது (லூக்கா 18 :14)
    - சமுதாயத்தில் தாழ்மையாக முன்மாதிரியாக செயற்படவேண்டும்.

- இயேசுவைப்போன்று நாமும் தாழ்மையாக வாழ்ந்தால் நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (லூக்கா 18:9-14)
- கடதாசி, மார்க்கர் பேனை
- ‘‘தாழ்வு’ என்பதை பற்றி எழுதப்பட்ட விளம்பரப் பலகை / அட்டவணை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் - பின்வரும் கற்றல் பேறுகளை பயன்படுத்தி ஆயத்தம் செய்யுங்கள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- (லூக்கா 18:9-14) திருவிவிலிய பகுதியை அவதானமாக வாசியுங்கள்.
- ‘‘வரி அறவிடுபவர் எமக்கு கற்றுத் தரும் தாழ்வு ‘‘ எனும் தலைப்பில் ஆக்கபூர்வமான சுவரொட்டியைத் தயாரியுங்கள்.
- ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

பிறருடன் தாழ்வாக வாழப் பழக்குங்கள்

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.1 :** திருவிவிலியத்தின் அமைப்பை விளங்கிக் கொள்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- திருவிவிலியத்தை வகைப்படுத்துவர்.
- திருவிவிலியத்தில் உள்ள இறைவார்த்தையை ஏற்றுக்கொள்வர்.
- திருவிவிலியத்திலுள்ள வகைகளை சுவரொட்டியாக தயாரிப்பர்.
- திருவிவிலியத்திலுள்ள முன்மாதிரிகளையும், போதனைகளையும் பின்பற்றுவர்.
- பிறரும் திருவிவிலியத்தை வாழ்வுக்கு முன்னுதாரணமாக கொள்வதற்கு வழிகாட்டுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- திருவிவிலியத்தை மாணவருக்கு கொடுங்கள்.
- திருவிவிலிய உள்ளடக்க நூல்களின் பெயர்களை இனம் காண உதவி செய்யுங்கள்.
- அதனைப் பின்பற்றி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - திருவிவிலியமானது பெறுமதிமிக்க நூலாகும்.
  - இது நூற்களஞ்சியமாகும்.
  - திருவிவிலியத்தில் 66 நூல்கள் உள்ளன.
  - அதனை இரு பகுதிகளாக வகைப்படுத்தலாம்.
  - பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பகுதிகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- ஆய்வுப்பத்திரத்தை மாணவருக்கு வழங்குங்கள். (இணைப்பு 1)
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தைச் சாராம்சப் படுத்துங்கள்.

  - பழைய ஏற்பாட்டில் 39 நூல்களும் புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் உள்ளன.
  - பழைய ஏற்பாட்டில் முதல் 5 நூல்களும் பஞ்சாகமங்கள் என அழைக்கப்படுகின்றது.
  - புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு நூல்களும் நற்செய்தி நூல்களாக கருதப்படுகின்றன.
  - திருவிவிலியத்தில் முதல்நூல்- தொடக்கநூல், இறுதி நூல்- திருவெளிப்பாடு.
  - நூல்கள் அனைத்தும் ஒரே கருப்பொருளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.
  - திருவிவிலியத்தில் இறைவார்த்தைகள் அடங்கியுள்ளன.
  - கிறிஸ்தவர்களின் புனித நூல் திருவிவிலியம்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் மட்டை 1, மாக்கர் பேனை
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- திருவிவிலிய நூல்களின் ஒழுங்கமைப்பை கற்றுக்கொள்ளுங்கள்.
- திருவிவிலிய வகைப்படுத்தலைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்.
- திருவிவிலிய நூல்களை வகைப்படுத்திக் காட்டும் சுவரொட்டியை தயாரியுங்கள்.
- வகுப்பறையில் காட்சிப்படுத்த ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

தினமும் ஒழுங்கு முறையில் திருவிவிலியத்தை வாசிப்பதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.2 :** திருவிவிலியத்தின் சிறப்புத் தன்மையை அறிவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறு** :

- திருவிவிலியத்தைச் சரியாக வாசிப்பதன் முக்கியத்துவத்தை விபரிப்பர்.
- இறைவார்த்தை மூலம் இறை வழிநடத்தல் கிடைக்கும் என ஏற்றுக் கொள்வர்.
- திருவிவிலியத்தின் அறிவுரைகள் தொடர்பாக சிறு புத்தகமொன்றை தயாரிப்பர்.
- இறைவார்த்தை உயிருள்ளது என விசுவாசிப்பர்.
- திருவிவிலிய வழிகாட்டுதலுக்கேற்ப நட்புறவுடன் இணைந்து வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- திருவிவிலியத்தை மாணவருக்கு வழங்கி அவர்கள் மிக விரும்பிய திருவிவிலிய வசனத்தை தெரிந்தெடுக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவ்வசனத்தினை மாணவர் விரும்புவதற்கான காரணத்தை ஒவ்வொரு மாணவரிடமும் கேட்டறியுங்கள்.
- திருவிவிலியத்திலிருந்து பெறும் வழிகாட்டல்கள் தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - திருவிவிலிய பகுதியிலிருந்து முன்மாதிரிகளை பெறுகிறோம்.
  - திருவிவிலிய பகுதியிலிருந்து போதனைகளை பெறுகிறோம்.
  - திருவிவிலியத்தை வாழ்வுக்கு ஏற்புடையதாக்கிக்கொள்ள முடியும்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

  - திருவிவிலியம் மூலமாக உயிரோட்டமுள்ள வழிநடத்தலை பெறலாம்.
  - திருவிவிலியம் மூலமாக எமது வாழ்வை ஒளியூட்டலாம்.
  - எப்போதும் இறைவார்த்தை மூலம் இறைவழிநடத்தலை பெறலாம்.
  - இன்ப துன்பங்களில் இறைவார்த்தை எம்மை பலப்படுத்துகிறது.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம்
- இணைப்பு 1 , 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1

## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள "அறிவுரை வாக்கியங்களை" சேகரியுங்கள்.
- புதிய ஏற்பாட்டில் நல்வாழ்வுக்கான இயேசுவின் போதனைகளை சேகரியுங்கள்.
- இயேசுவின் போதனைகளை A4 தாளில் எழுதுங்கள்.
- அவற்றை உள்ளடக்கியதான சிறு புத்தகம் தயாரியுங்கள்.
- சிறு புத்தகத்தை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**வீட்டுச் சூழல்**

வாழ்வில் ஏற்படும் சவால்களை இறைவார்த்தைகளால் வெற்றி கொள்ள பழக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.3 :** தாவீதின் மூலமாக வாழ்வில் பலம் பெறுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- தாவீதிடமிருந்த இறை விசுவாசம் தொடர்பான கருத்துக்களைச் சேகரிப்பர்.
- சவால்களை வெற்றிகொள்ள இறை ஆற்றல் எமக்குக் கிடைக்குமென ஏற்றுக்கொள்வர்.
- தாவீதின் இறை விசுவாசம் வெளிப்படும் வாக்கியத்தை முன்வைப்பர்.
- இறைவனின் பெயரால் வெற்றிபெற முடியும் என விசுவாசிப்பர்.
- சமுதாயத்தில் தராதரம் பாராது செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2 பாடலை வழங்குங்கள்.
- அதனை தாளத்துடன் பாடச்செய்யுங்கள்.
- அதன் மூலம் வலியுறுத்தப்படும் கருத்துக்கள் தொடர்பாக சிந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - இறைவன் எம்மை பாதுகாக்கிறார்.
  - இறைவன் எம்மை வழிநடத்துகிறார்.
  - இறைவன் பகைவரிடமிருந்து எம்மை பாதுகாக்கிறார்.
  - இறைவன் எம்மை வளப்படுத்துகிறார்.

(20நிமிடங்கள்)

**படிமுறை 2**

- மாணவரை சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- அனைத்து குழுவினருக்கும் திருவிவிலியத்தை வழங்குங்கள்.
- ஆய்வுபத்திரத்தை (இணைப்பு 1) பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து வழிகாட்டுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

  - தாவீது ஓர் இடையன்.
  - தாவீது இறைவனை அன்பு செய்தான்.
  - தாவீது சவாலை வெற்றிகொண்டான்.
  - இறைவன் தாவீதைக் கைவிடவில்லை. ( 1 சாமு 17: 37)

- இறைவனின் பெயரால் தாவீது வெற்றி கொண்டான். (1சாமு 17: 45 - 47)
- இறைவன் எங்களை பலப்படுத்துகிறார்.
- மன்னிப்பு வழங்குவதால் வாழ்வில் மாற்றத்தை உருவாக்கலாம்.
- தராதரம் பாராது இறைவிருப்பத்தை நிறைவேற்ற இறைவன் எம்மைத் தேர்ந்துகொண்டார்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (1சாமுவேல் 17:37 – 40, 45, 47)
- A4 தாள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- உங்கள் குழுவினருக்கு வழங்கப்பட்ட திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- அப்பகுதியில் வெளிப்படும் கருத்துக்கள் தொடர்பாக குழுவிலுள்ள ஏனையவருடன் கலந்துரையாடுங்கள்.
- அதனைக் கொண்டு ஆக்கப்பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

குழு : 1

1 சாமுவேல் 17: 37-40

சித்திரமொன்றை வரையுங்கள் .

குழு : 2

1 சாமுவேல் 17: 45

இதில் வெளிப்படும் கருத்துக்களை ஆக்கப்பூர்வமாக எழுதுங்கள்.

குழு : 3

1 சாமுவேல் 17: 37-40

புத்தக அடையாள அட்டை தயாரியுங்கள்.

- ஆக்கங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**இணைப்பு 2**

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே
தாழ்ச்சி அடையேன் என்றுமே
அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து

அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்
ஆத்துமாவை தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிறைக்கிறாரே
மகிமையின் நாமத்தின் நிமித்தவர்
தம் நீதியின் பாதையில் நடத்துகிறார்

மரண பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே
அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றும்

சத்துருக்கள் முன்னில் எனக்காக
பந்தியொன்றாயத்தம் செய்தார்
என்னைத் தம் எண்ணையால் அபிசேகித்து
என் பாத்திரம் நிரம்பி வழியச் செய்தார்

ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும்
நன்மை கிருபை தொடரும்
கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன்

**வீட்டுச் சூழல்**

வாழ்வில் தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பங்களில் இறை வழிகாட்டலை நாடுவதில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.4 :** சகோதர அன்புடன் செயற்படுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- மிரியாமிடம் காணப்பட்ட நற்பண்புகளை விபரிப்பர்.
- இறை பாதுகாப்பு எப்போதும் கிடைக்கும் என ஏற்றுக்கொள்வர்.
- மிரியாமின் வாழ்க்கை கதையை ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.
- சவால்களுக்கு மத்தியில் முன்மதியோடு செயற்படுவர்.
- சமுதாயத்தில் சகவாழ்வு வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- படத்தை வகுப்பில் காட்சிபடுத்துங்கள்.
- அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

  - மோசேயின் சகோதரி மிரியாம்.
  - மிரியாம் தனது சகோதரனான மோசேயை நேசித்தார்.
  - மிரியாம் ஆபத்தில் தமது சகோதரரைப் பாதுகாத்தார்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- வி.ப. 2: 5-9 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- ஆய்வுப்பத்திரத்தை மாணவருக்கு வழங்குங்கள். (இணைப்பு 1)
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

  - மிரியாம் சகோதர அன்புடன் செயற்பட்டார். (வி.ப. 2:5-9)
  - அரச ஆணைகளுக்கு மத்தியில் செயற்படுவதற்கு மிரியாமிடம் பயமற்ற தன்மை காணப்பட்டது.
  - தனது சகோதரன் மோசேக்கு சகோதரியாகவும் தாயாகவும் இருந்தார்.
  - மிரியாம் முன்மதியுடன் அவதானமாக செயற்பட்டார்.
  - இறைவனின் பெயரால் வெற்றி கொண்டார்.
  - நாமும் சகோதரத்துவத்துடன் செயற்பட வேண்டும்.
  - சமுதாயத்தில் மற்றவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம் (வி.ப. 2: 5-9)
- மிரியாமின் கதைக்கு பொருத்தமான பெரிய படங்கள்.
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

**இணைப்பு 1**

**குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்**

- **வி.ப. 2: 5-9** திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- வாசித்த பகுதியைக் கலந்துரையாடுங்கள்.
- மிரியாமின் கதையை கேலிச்சித்திரமாக முன்வையுங்கள்.

**வீட்டுச் சூழல்**

சமுதாயத்தில் சகோதரத்துவத்துடன் வாழ வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 5:0** : திருவிவிலியத்தை வாழ்விற்கு வழிகாட்டியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.5 :** இறைதொனிக்கு செவிமடுத்து வாழப் பழகுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறு** :

- சாமுவேலின் அழைப்புக்கு பொருத்தமான கருத்துக்களைச் சேகரிப்பர்.
- இறைகுரலுக்குச் செவிகொடுக்க வேண்டுமென ஏற்றுக்கொள்வர்.
- சாமுவேல் கதைக்கு பொருத்தமான சித்திரத்தை வரைவர்.
- இறைகுரலுக்கு செவிமடுப்பர்.
- பொது இறைவழிபாட்டில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- முன்பயிற்சியுடன் இணைப்பு 2ஐ பாத்திரமேற்று நடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

    - இறைவன் எம்மோடு உரையாடுகின்றவர்.
    - நாம் இறை குரலுக்கு செவிகொடுக்க வேண்டும்.
    - இறைகுரலுக்கு மாறுத்தரம் காட்ட வேண்டும்.
    - இறைவனின் பணியாளராக நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- 1 சாமுவேல் 3:1-10 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- ஆய்வுப்பத்திரத்தை மாணவருக்கு வழங்குங்கள். (இணைப்பு :2)
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்
- மாணவரை அவதானித்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- மாணவர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளியுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பாடத்தை சாராம்சப் படுத்துங்கள்.

    - சிறுவயதிலிருந்தே திருச்சபை பணியில் ஈடுபட்டிருந்தார். (1 சாமு 3:1)
    - ஒவ்வொரு நாளும் இறைவனோடு உரையாடினார். (1 சாமு 3:2-10)
    - நாம் சிறுவயதிலிருந்தே இறைவழிபாட்டில் ஈடுபடவேண்டும்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவிவிலியம் (1சாமுவேல் 3:1-10)
- சாமுவேல் விண்ணப்பம் செய்யும் படம்.
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத்தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக கற்றற்பேறுகளின் அளவு, பொருத்தப்பாட்டுக்கேற்ப நியதிகளை தயாரிப்பதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## இணைப்பு 1
## குழுத்தேடல் ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- 1சாமுவேல் 3:1-10 திருவிவிலிய பகுதியை வாசியுங்கள்.
- சாமுவேலின் கதையில் உம்மை கவர்ந்த பகுதியை சித்திரமாக வரைந்து வர்ணம் தீட்டுங்கள்.
- உங்கள் ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

## இணைப்பு 2

**இறைகுரல்** : சாமுவேல்!

**சாமுவேல்** : இதோ அடியேன். என்னை அழைத்தீர்களா?

**ஏலி** : நான் அழைக்கவில்லை. திரும்பிச் சென்று படுத்துக்கொள்.

**இறைகுரல்** : சாமுவேல்!

**சாமுவேல்** : இதோ அடியேன். என்னைக் அழைத்தீர்களா?

**ஏலி** : நான் அழைக்கவில்லை. மகனே! திரும்பிச் சென்று படுத்துக்கொள்.

**இறைகுரல்** : சாமுவேல்!

**சாமுவேல்** : இதோ அடியேன். என்னைக் அழைத்தீர்களா?

**ஏலி** : சென்று படுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் ‘‘ஆண்டவரே பேசும். உம் அடியான் கேட்கிறேன் என்று பதில் சொல்.’’

**இறைகுரல்** : சாமுவேல், சாமுவேல்!

**சாமுவேல்** : பேசும். உம் அடியான் கேட்கிறேன்.

**வீட்டுச் சூழல்**

இறைவாக்குகளுக்கு கீழ்படிவதற்கு வழிகாட்டுங்கள்

- **கணணி பதிப்பு :** செல்வி. த. ஸ்டெலா தர்ஷினி
திருமதி. எம்.பி. செல்வநிதி பெரேரா
செல்வி. தயானா மோசெஸ்
திரு. டயஸ் அமரசிங்க